பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 29

புதன்கிழமை
25 டிசெம்பர் 2024

மார்கழி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

புதன்பொய்கை

அடுத்த மாதம் முதல் டிஜிற்றல் அ. அட்டை

» 03




யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் நேற்று நள்ளிரவு பாலன் பிறப்பு ஆராதனைகள் நடைபெற்றன.




# கச்சதீவை இந்தியா மீளக்கோரவில்லை!



### கட்சிகளின் பேச்சு முக்கியத்துவம் பெறாது அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெம்பர் 25**

**கச்சதீவை மீள ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் இருந்து எந்தக் கோரிக்கையும் விடுக்கப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

15

## பெண்ணுடன் சில்மிஷம்; கான்ஸ்டபிளுக்கு சிக்கல்

யாழ்ப்பாணம், டிசெ.25
மதுபோதையில் பெண்ணிடம் சில்மிஷமாக உரையாடி தவறான முறையில் நடக்க முயன்றார் என்று தெரிவித்து, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

15

## சவேந்திர சில்வாவின் பதவி பறிபோகின்றது

கொழும்பு, டிசெ.25
பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகத்தை இல்லாமல் செய்வதனூடாக சவேந்திர சில்வாவின் பதவியைப் பறிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

15

## மீனவர் கைதுகளை உடனே நிறுத்துக!

### ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்!

சென்னை, டிசெ.25
இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி தமிழக

15

## நாடு முழுவதும் உருவாகவுள்ள புகைத்தல் தடை வலயங்கள்!

கொழும்பு, டிசெ.25
நாடளாவிய ரீதியில் 200 புகைத்தல் தடை வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. புகைத்தல் தடை வலயங்களில் புகைத்தல்

15

## தவறான முடிவெடுத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

15

## தமிழக மீனவர்களுக்கு 7 ஆம் திகதிவரை மறியல்

மன்னார், டிசெ.25
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 17 பேரும் விளக்கமறியலில் வைக்கப்

15



முச்சந்தி முராரி

'அத்துமீறாமல் இருந்தால் ஏன் அவையளைப் பிடிக்கப்போயினம்?'

## கணவன், மனைவி விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம், டிசெ.25
சண்டிலிப்பாய் சந்தியில் நேற்று நடந்த விபத்தில் கணவனும், மனைவியும் காயமடைந்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள

15



## மதுக்கடைகளை மூடக்கோரி கிளிநொச்சியில் போராட்டம்!

கிளிநொச்சி, டிசெ.25
கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள மதுபான விற்பனை நிலையங்களை நிரந்தரமாக மூடவேண்டும் என்று வலியுறுத்தி நேற்று கண்டன ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்கள் கோரிக்கை அடங்கிய ஜனாதிபதிக்கான மனுவை கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ். முரளிதரனிடம் கையளித்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுச்சீட்டு அலுவலகம் யாழ்ப்பாணத்தில் விரைவில்

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்றை உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கடவுச்சீட்டை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)

## கேப்பாபிலவு முகாமில் ரொஹிங்ய அகதிகள்!

முல்லைத்தீவு, டிசெ. 25

முல்லைத்தீவு கடற்பகுதியில் கடந்த வாரம் தஞ்சமடைந்த 103 ரொஹிங்ய அகதிகளும், முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தள முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மிரிஹானவிலுள்ள தடுப்பு முகாமில் தங்க வைக்குமாறு திருகோணமலை நீதிவான் நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது. எனினும், அதற்குரிய வசதிகள் இல்லையென்பதால், அவர்கள் கேப்பாபிலவு விமானப் படைத்தள முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ம-இ)

## ரஷ்யப் பிரஜை போதையுடன் கைது

கொழும்பு, டிசெ. 25

'குஷ்' என்ற போதைப்பொருளை சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 1 கிலோ 50 கிராம் குஷ் போதைப்பொருளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (ச-இ)

## குடு சலிந்துவுக்கு பிடியாணை

கொழும்பு, டிசெ. 25

பிணையில் விடுவிக்கப்பட்ட "குடு சலிந்து" என அழைக்கப்படும் சலிது மல்ஷிக குணரத்னவை கைது செய்யுமாறு பாணந்துறை நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு குடு சலிந்துவுக்கு நீதிமன்றம் நிபந்தனை விதித்தது.

ஆனால் அவர் இதனைத் தவிர்த்ததால் குடுசலிந்துவை கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

### சீனக்கப்பல்களைத் தொடர்ந்து

# இந்தியக் கப்பல்கள் கொழும்பில் நங்கூரம்

வலுக்கின்றதா பிராந்தியப் பதற்றம்?



**கொழும்பு, டிசெ. 25**

**இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்கள், கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

சீனாவின் மருத்துவக் கப்பலொன்றும், போர்க் கப்பலொன்றும் இலங்கைக்கு அண்மையில் வந்து சென்றிருந்தன. இதன் தொடர்ச்சியாகவே, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான 'அபிராஜ்' மற்றும் 'வைபவ்' ஆகிய இரு போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கடல்சார் பாதுகாப்புகளை பலப்படுத்துவதையும், சவால்களைத் திறம்பட எதிர்கொள்வதையும் இந்தியக் கப்பல்களின் பயணம் வெளிப்படுத்துவதாக, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுக் கப்பல்கள் தொடர்பில், இறுக்கமான கொள்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என்று இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)


## பாதாள உலகத்தலைவர்கள் நாட்டைவிட்டுத் தப்பியோட்டம்

கொழும்பு, டிசெ. 25

பாதாள உலகக்குழுக்களின் இரண்டு முக்கியமான தலைவர்கள் நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல போதைப்பொருள் வர்த்தகரான குடு சலிந்து மற்றும் பாதாள உலகக் குழுத்தலைவர் பொடி லெசி ஆகியோரே இவ்வாறு நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தால் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்ட அவர்கள் இருவரும் கடல் மார்க்கமாகத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று பொலிஸ் வட்டாரங்களும் தகவல் வெளியிட்டுள்ளன. (ம-இ)



## தேசிய மின்கட்டமைப்பில் வகவத்தை மின்னுற்பத்தி

கொழும்பு, டிசெ. 25

2 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்ட வகவத்தை உப மின்னுற்பத்தி நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.


இலங்கை முதலீட்டுச் சபையால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 5 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மின்னுற்பத்தி நிலையத்தின் ஊடாக 90 மெகாவாட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## 6 வகைப் பயிர்கள் அரசால் இழப்பீடு

யாழ்ப்பாணம், டிசெ.25

பயிர்ச் சேதங்களுக்குள்ளான 6 பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். அதற்கமைய அரிசி, சோளம், உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம் மற்றும் சோயாபீன்ஸ் ஆகிய பயிர்களுக்கு இவ்வாறு இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## விடுமுறைக் காலத்தில் விசேட போக்குவரத்து!



கொழும்பு, டிசெ. 25

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்துச் சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பிரதிப் பொதுமுகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹங்ச தெரிவித்துள்ளார்.

பேருந்துச் சேவைகளுக்கு மேலதிகமாக, ரயில் சேவைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. பண்டிகைக் காலம் நிறைவடையும் வரை இந்தச் சேவைகள் நடைமுறையில் இருக்கும் என்றும் இலங்கைப் போக்குவரத்துச்சபையின் பிரதி பொதுமுகாமையாளர் மேலும் கூறியுள்ளார். (ம-இ)

## ஜனாதிபதி நிதிய முறைகேடு சி.ஐ.டி.யால் விசாரணை

யாழ்ப்பாணம், டிசெ.25

கடந்த காலங்களில் ஜனாதிபதி நிதியத்தில் ஏதேனும் முறைகேடு நடந்துள்ளதா? என்பது குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பதில் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறிராம் ஜூவல்லர்ஸ்
புத்தாண்டை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான
விசேட சலுகை
22 கரட் தங்க ஆபரணங்களுக்கான செய்கூலி
சேதாரத்தில் 20 % - 50 % வரையிலான
விலைக்கழிவு வழங்கப்படும்.
வாங்கும் அனைத்து ஆபரணங்களுக்கும்
தரச்சான்றிதழ் வழங்கப்படும்
இல.158, 193 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

077 165 1729, 077 773 0567, 021 222 8334

# போதைக்கு எதிரான போர்: பொலிஸாருக்கு அதிகாரம்!

கொழும்பு, டிசெ. 25

**போதைப் பொருள்களை நாட்டில் இருந்து ஒழிப்பதற்காகப் பொலிஸாருக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**

புறக்கோட்டை மிதக்கும் வணிக வளாகம் 2014ஆம் ஆண்டில் 352 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது. ஆனால், இந்த வணிக வளாகம் தற்போது போதைப்பாவனை மையமாக மாறியுள்ளது. இவ்வாறான மோசடிகள் தொடர்பிலும் சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# பஸ் சாரதியின் மீது போத்தலால் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் சாரதி மற்றும் நடத்துநர் மீது இனந்தெரியாத இருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கானவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று காரைநகர் இ.போ.ச. சாலை முகாமையாளர் தெரிவித்தார்.

காரைநகர் சாலையின் 786 வழித்தட பஸ் சாரதி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பஸ்ஸை நிறுத்திவிட்டு, அருகில் இருந்த தேநீர்க் கடைக்கு நடத்துநருடனும், யாழ்.சாலை நடத்துநருடனும் சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த இருவர் சாரதியின் தலையில் போத்தலால் தாக்கியுள்ளனர். அவர்களைத் தடுக்க யாழ்.சாலை நடத்துநர் தடுத்தபோது, அவரைக் கத்தியால் வெட்டுவதற்குக் கலைத்துச் சென்றுள்ளனர். அதில் யாழ்.சாலை நடத்துநருக்கு கையில் காயம் ஏற்பட்டுள்ளது. பின்னர் தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து இ.போ.ச. ஊழியர்கள் சிறிது நேரம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பொலிஸார் சந்தேகநபர்களைக் கைது செய்வதாக வழங்கிய உறுதிமொழியை அடுத்து சேவைகள் வழமைபோன்று நடைபெற்றன என்று காரைநகர் சாலை முகாமையாளர் தெரிவித்தார். (எ-125)

# அடுத்த மாதம் முதல் டிஜிற்றல் அ. அட்டை

கொழும்பு, டிசெ. 25

டிஜிற்றல் அடையாள அட்டை வழங்கும் பணிகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு உதவுமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்தக் கோரிக்கையை மனப்பூர்வமாக ஏற்று இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்திருந்தது. உறுதியளித்தபடி திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்திய அதிகாரிகள் குழு அடுத்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளது. இந்த டிஜிற்றல் அடையாள அட்டை மூலம் அரச நிவாரணங்களை பெற்றுக் கொள்பவர்களுக்கு அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் உரிய வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாகவே வைப்புச்செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-22,6)

# பாதாளக்குழுக்கள் ஒடுக்கப்படும்

கொழும்பு, டிசெ.25

பாதாளக்குழுக்கள் மற்றும் போதைப்பொருள்களுக்கு முடிவு கட்டும் விடயத்தில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகின்றது. இது விடயத்தில் பின்வாங்கலுக்கு இடமில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாதாளக்குழுக்கள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்கு நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும் இதற்குரிய ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நடவடிக்கைகள் பற்றி பேசுவதைவிட பிரதிபலன் [illegible] பேசுவதே சிறந்தது எனவும் குறிப்பிட்டார். [illegible]




**பே**ச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை எண்ட கணக்கிலதான் திசைகாட்டிக்காரரின்ர ஆட்சியும் போகுது. ஜனாதிபதி எலக்சன் நடக்கேக்க ஒரு பிரசார வீடியோ ஒண்டை திசைகாட்டிக்காரர் விட்டவை. அதில ஒரு வயதான அம்மா, தன்ர ஐடென்ரி கார்ட் துலைஞ்சு போனதால ஐடென்ரி கார்ட் எடுக்கிற ஒப்பீஸுக்கு போவா. அங்க அவாக்கு சிங்களம் தெரியாமல் தன்ர விசயத்தைச் சொல்ல தடுமாற, ஒரு ஒப்பீஸர் அவாவோட தமிழில கதைச்சு அந்த அலுவலை உடனேயே செய்து குடுப்பார். அதுக்கு அந்த அம்மா தம்பி நீங்கள் திசைகாட்டியோ? எண்டு கேக்க, அவரும் ஓமெண்டுவார். இப்பிடி இன,மொழி வேறுபாடில்லாமல் எல்லா வேலையையும் சனங்கள் உடனுக்குடன செய்யலாம் எண்டு திசைகாட்டிக்காரர் எலக்சனில சொன்னதையெல்லாம் இப்ப மறந்திட்டினம் போல. எல்லா வேலையும் நத்தை வேகத்தில தான் நடக்குதாம்.

யாழ்ப்பாணத்தில கனபேர் இப்ப பேப்பர் லைசென்ஸ் தான் வைச்சிருக்கினம். (இதொண்டும் பார் லைசென்ஸ் இல்லை, வாகனம் ஓடுறதுக்கான லைசென்ஸ் தான்) எக்ஸாம் பாஸ் பண்ணினவைக்கும், பழைய லைசென்ஸை புதுப்பிக்க குடுத்தவைக்கும் 'இப்ப லைசென்ஸ் அடிக்கிற பிளாஸ்ரிக் கார்ட் தட்டுப்பாடு. அதால தற்காலிகமா பேப்பரில பிரிண்ட் எடுத்து தாறம்' எண்டு சொல்லி எல்லாருக்கும் பேப்பர் லைசென்ஸ் தான் குடுத்தவையாம். இவையளும் அப்போதைக்கு அதை வாங்கிக் கொண்டந்திட்டு, தங்களுக்கு ஒரிஜினல் லைசென்ஸ் இண்டைக்கு வரும், நாளைக்கு வருமெண்டு ஒரு வருசத்துக்கும் மேலா இலவு காத்த கிளியள் மாதிரி தபால்காரரை பார்த்துக்கொண்டிருந்ததுதான் மிச்சம். இன்னமும் அவைக்கு லைசென்ஸ் வந்தபாடில்லை. அதைவிடப் பகிடி என்னெண்டால், இவையளுக்குப் பிறகு லைசென்ஸுக்குப் போட்ட சிலருக்கு ஒரிஜினல் லைசென்ஸ் வந்ததுதான்.

இதுக்குப் பிறகும் வீட்டிலேயே முட்டை போட்டுக் கொண்டிருந்தால் ஒண்டுக்கும் ஆகாதெண்டிட்டு, இஞ்சையுள்ள 'மோட்டார் ட்ரபிக்' ஒப்பீஸுக்குப் போய் எங்களுக்கு ஒரிஜினல் லைசென்ஸ் எப்ப வரும்?' எண்டு கேட்டிருக்கினம். அவையும் 'பொறுங்கோ ஒன்லைன்ல 'செக்' பண்ணிப் பார்த்திட்டுச் சொல்றம்' எண்டிட்டு, இவையளின்ர லைசென்ஸ் விசயம் என்ன கட்டத்தில இருக்கெண்டு பார்த்திருக்கினம். எல்லாருக்கும் லைசென்ஸ் பிளாஸ்ரிக்கில பிரிண்ட் பண்ணி நாலைஞ்சு மாதமாகிட்டு எண்டு ஒன்லைன்ல காட்டியிருக்கு. அப்ப ஏன் வரேலை? எண்டு கேட்டால், 'பிரிண்ட் பண்ணின லைசென்ஸுகளை இன்னும் தபாலில போடேலையாம்' எண்டு கொழும்பில இருந்து பதில் வந்திருக்குது. லைசென்ஸ் அச்சடிக்கிற பிளாஸ்ரிக் கார்ட் இல்லையெண்டுதானே பேப்பர் லைசென்ஸ் குடுத்தவை. அப்ப பிளாஸ்ரிக் கார்ட் வந்து, அதில அச்சடிச்சு நாலஞ்சு மாசம் ஆன பிறகும் அதை தபாலில அனுப்பாமல் இருக்கினமெண்டா உவையளின்ர வேலைத்திறத்தை என்னெண்டு சொல்லுறது?

அதெல்லாம் சரி, பிந்திப் போட்டவைக்கு எப்பிடி லைசென்ஸ் டக்கெண்டு கிடைச்சதெண்டு தேடிப்பார்த்தால், அவையள் சில வெளியாக்களுக்கு காசு குடுத்து அலுவல் பார்த்ததாலதான் உடன கிடைச்சதெண்டு தெரிய வந்தது. அப்ப திசைகாட்டியின்ர ஆட்சியிலையும் காசும், ஊழலும்,மெத்தனமும் இன்னும் கொடிகட்டித்தான் பறக்குது.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை.

**கடகம்:** தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**கன்னி:** பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர் பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளும் ஏற்படும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். தாய்மாமன் வகையில் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

## டெங்கு ஒழிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 25

தன்னார்வ அமைப்பான விதையனைத்தும் விருட்சமே அமைப்பானது கருகம்பனை பொது அமைப்புகளுடனும் வலி. வடக்கு பிரதேசசபையுடனும் இணைந்து நடத்தும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

கருகம்பனை கிராமத்தை உள்ளடக்கிய பகுதிகளான நகுலேஸ்வரம், இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்ட உறுப்பினர்கள், கிராமத்தவர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொலிஸார் வலி. வடக்கு பிரதேசசபை ஊழியர்கள் பங்கேற்கவுள்ளனர். (ச-22,27)

## மறவன்புலவில் மானிய உரம்

யாழ்ப்பாணம்,டிசெ. 25

மறவன்புலவு கமக்கார அமைப்புக்குட்பட்ட விவசாயிகளுக்கு இலவச மானிய உர விநியோகம் நாளையும் நாளை மறுதினமும் கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகம் இடம்பெறவுள்ளது.

அமைப்பின் அங்கத்தவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் வரி செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றுடன் வருகை தருமாறு அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (ச-9)



## நாகராஜ பூசை!

யாழ்ப்பாணம்,டிசெ.25

பருத்தித்துறை - தும்பளை கிழக்குக் கடற்கரை கறுப்பு சுவாமி பந்தளராஜ குமார ஐயப்பன் தேவஸ்தானத்தின் 16 ஆம் பூசையான நாகராஜ பூசை கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. ரூபன் குருசாமி தலைமையில், சோ.தனஞ்செயன் குருக்களும் இணைந்து நடத்திய பூசையில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன. இதில் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ஐயப்பன் பக்தர்கள், அடியவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (ச-33-27)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ. 25

சைவபரிபாலனசபையில் ஆண்டுதோறும் இடம்பெற்று வரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு இல.66 கல்லூரி வீதி, நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-25)

## திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.25

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த திருவாசகச் சொற்பொழிவுத் தொடர் 37 நவாலி தெற்கு திருவருள் மிகு ஸ்ரீ நாகராஜா ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர், பிரசங்க சக்ரவர்த்தி கந்த. சத்தியதாசன் 'மாணிக்கவாசகரும் பிடித்தபத்தும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச-45)

## மீன் சந்தைக் கட்டடம் திறப்பு



யாழ்ப்பாணம், டிசெ.25

யாழ். மாநகராட்சி மன்றத்தினால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பண்ணை மீன் விற்பனை சந்தைக் கட்டடம் கடந்த சனிக்கிழமை மக்கள் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகம் இந்தக் கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார். (ச-33)

## யாழ்.பல்கலையில் மார்கழி இசைவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ்.இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் மற்றும் யாழ்.வணிகர் கழகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள 2024 மார்கழி இசைவிழா எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் மாலை 4.45 மணி முதல் இரவு 9.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. தவில், நாதஸ்வரம், வயலின், கர்நாடக சங்கீதம், நடனம், நாட்டிய நாடகம், இலக்கிய நாடகம் போன்ற கலாசாரப் பண்பாட்டு நிகழ்வுகளை உள்ளடக்கிய மாபெரும் இசைவிழாவாக நடத்தப்படவுள்ள மூன்று நாள் நிகழ்வுகளிலும் இந்திய ஈழத்துக் கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## இராணுவத்தினரால் உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 25

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்களுக்காக உதவித் திட்டங்கள் 513 வது இராணுவப் படைப்பிரிவால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 50 மாணவர்களின் தேவையை கருத்தில் கொண்டு 50 துவிச்சக்கரவண்டிகளும், 25 கர்ப்பிணிப் பெண்களுக்கான உலர் உணவுப்பொருள்களும், 25 வயோதிபர்களுக்கான உணவு வகைகளும் இதன்போது வழங்கிய வைக்கப்பட்டன.

துவிச்சக்கரவண்டிகளுக்கான நிதிப்பங்களிப்பை புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் ரஜிகரன் சண்முகரத்தினம் வழங்கினார். (ச-125)



## தேசிய கலை இலக்கியப் போட்டியில் பச்சிலைப்பள்ளி பெண்கள் சாதனை

பளை, டிசெ. 25

கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய தேசிய மட்ட கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்று பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தை சேர்ந்த பெண்கள் சாதனை படைத்துள்ளனர். கவிதைப் போட்டி சிரேஷ்ட பிரிவில் த. டிலக்ஸனா இரண்டாம் இடத்தையும், பாடலாக்கப் போட்டி திறந்த பிரிவில் பா. பாலாஜினி இரண்டாம் இடத்தையும் பெற்றனர். அதேவேளை பா. பாலாஜினி இளங்கலைஞர் விருதைப் பெற்றுக்கொண்டார். (ச- 25,9)

## உதவி வழங்கல்



யாழ்ப்பாணம், டிசெ.25

சுவிட்ஸர்லாந்து நாட்டில் இயங்கி வருகின்ற புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தினரின் முதல் கட்ட இரண்டரை இலட்சம் ரூபா நிதியுதவியில் தன்னார்வத் தொண்டு அமைப்புகளான புங்குடுதீவு உலக மையம், சூழகம் ஆகியவற்றினூடாக புங்குடுதீவிலுள்ள 67 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள், பாய், படுக்கை விரிப்பு, பனடோல், சவர்க்காரம், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான பாவனைப் பொருள்கள் மற்றும் கிருமிநாசினி பொருள்களான லைசோல், குளோரின் போன்றவை வழங்கப்பட்டன. நிகழ்வில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விதான பத்திரன, சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-45)



## யாழ். மாவட்டச் செயலருடன் கட்டளைத் தளபதி சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25

யாழ். மாவட்டத்தின் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் மானந்த யஹம்பத், யாழ். மாவட்ட செயலர் ம. பிரதீபனை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். (ச- 25, 9)



## 'சேவ் எ லைப்' நிறுவனத்தால் அணையாடைகள் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ.24

இலங்கை முழுவதும் பல மாவட்டங்களில் நிலவும் வெள்ள நெருக்கடிக்கு மத்தியில், இளைஞர்கள் தலைமையிலான அரச சார்பற்ற நிறுவனமான 'சேவ் எ லைப்' அவசர மனிதாபிமான தேவைகளை நிவர்த்தி செய்து வருகிறது. அதன் நிவாரண நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு உள்ளிட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தனிநபர்களுக்கு மாதவிடாய் சுகாதார அணையாடைகளை விநியோகித்து வருகிறது. (ச-23)

## நத்தார் விழா

செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் கிறிஸ்தவக் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த நத்தார் விழா கழகத் தலைவர் ஈ. திருக்கோணேஸ்வரன் தலைமையில் யாழ். கலட்டியில் அமைந்துள்ள றூட் பொது மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனத்தைச் சேர்ந்த 170 அங்கத்தவர்களுக்கு உலர் உணவுப் பொருள்களும், 150 அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்களும், 30 பேருக்கான புத்தாடைகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ச-22,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளணிப் பற்றாக்குறையால்

# இழுத்து மூடப்படும் நிலையில் வேலணை மருத்துவமனை!

வவுனியா, டிசெ. 25

**வேலணை வங்களாவடி பிரதேச மருத்துவமனையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையால் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டு பகுதியளவில் இழுத்து மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக மருத்துவ மனை வட்டாரம் தெரிவித்துள்ளது.**

தீவகப் பிரதேசத்தின் இரண்டாவது பிரதான மருத்துவ மனையாக விளங்கும் இந்த மருத்துவமனைக்கு மாதாந்தம் 2500 க்கும் அதிகமான நோயாளர்களும் வருடாந்தம் 30 ஆயிரத்துக்கும் அதிகமான நோயாளர்களும் சிகிச்சைக்காக வருகின்றனர்.

குழந்தை பிரசவ விடுதி உள்ளிட்ட பல சிகிச்சைத் தொகுதிகளைக் கொண்டுள்ள இந்த மருத்துவமனை நெடுந்தீவு, ஊர்காவற்றுறை,வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு மண்டைதீவு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய நோயாளர்களின் அவசர தேவைகளை நிவர்த்தி செய்யும் ஒரு நிலையமாகவும் இருந்து வருகின்றது.

குறித்த மருத்துவமனை கடந்த நல்லாட்சிக் காலத்தில் அன்றைய சுகாதார அமைச்சராக இருந்த ராஜித சேனரத்னவால் 'பி' தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டது.

ஆனாலும் குறித்த தரத்துக்கு ஏற்ப ஆளணி வளங்களை நிவர்த்திக்கும் எந்தவிதமான பொறிமுறையும் எடுக்கப்படவில்லை.

பல தடவைகள் உரிய தரப்பினரது பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் அது கண்டுகொள்ளப்படாத நிலையே காணப்படுகிறது. எனினும் குறைந்தளவான ஆளணி வளங்களை கொண்டு குறித்த மருத்துவமனையின் தரத்துக்கு ஏற்ப 24 மணி நேரமும் குறைந்த ஆளணியுடன் சேவை முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக இரு மருத்துவர்களே இந்த மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இரவு பகலாக ஓய்வின்றி, தமக்கான விடுப்புகள் இன்றி பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலைமையை அடுத்து எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மருத்துவ சேவை மாலை 6 மணியுடன் நிறுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே புதிய அரசாங்கம் தீவக மக்களுக்கு 24 மணி நேர சேவையை வழங்க குறித்த மருத்துவமனையின் ஆளணிப் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் மருத்துவமனை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ச-20)



# வெள்ளம் சூழ்ந்த வீதி; அதிகாரிகள் அசமந்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 25

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உசன் - விடத்தற்பளை பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படும் நிலையில் மழைகாலங்களில் வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

மழைகாலங்களில் இந்த வீதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் வீதியூடாகப் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியபோதும் அவர்கள் இந்த வீதியை எட்டியும் பார்க்கவில்லை. வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குட்பட்ட இந்த வீதியால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பேருந்துகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

எனவே இந்த வீதியை இனியும் புனரமைக்க நடவடிக்கை எடுக்காதுவிடின் மாபெரும் போராட்டத்தை மேற்கொள்ள நேரிடும் - என்றனர். (ச-22,159)

# எம்.ஜி.ஆர். நினைவுதினம் வல்வையில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25



தமிழக முன்னாள் முதல்வரும் புரட்சித் தலைவருமான எம்.ஜி. இராமச்சந்திரனின் 37 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை ஆலடியில் உள்ள எம்.ஜி.ஆர். நினைவுத் தூபியடியில் நடைபெற்ற நிகழ்வில் எம்.ஜி.ஆரின் திருவுருவச் சிலைக்கு நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜி லிங்கத்தால் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-27)


# வட்டு. மருத்துவ அதிகாரியின் இடமாற்றத்தை இரத்துச் செய்க

மக்கள் கோரிக்கை

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவ அதிகாரி செந்தூரனின் இடமாற்றத்தை மக்களது நலனிலும் மருத்துவமனையின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு இரத்துச் செய்யவேண்டும் எனக் கோரி சமூகமட்ட அமைப்பினரால் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பவானந்தராஜாவுக்கு மனு கையளிக்கப்பட்டுள்ளது.

புதிதாக பதவியேற்றுள்ள பொறுப்பு மருத்துவ அதிகாரி எமது மருத்துவமனைக்கு வருகைதந்து ஒன்றரை வருடங்களே ஆகின்ற நிலையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளார். இன்னும் சிறிது காலம் அவர் எமது மருத்துவமனையில் பணியாற்றினால் சேவைகளை முழுமைப்படுத்துவார்.

எனவே மக்களாகிய எமது கோரிக்கைகளை செவிமடுத்து எமது மருத்துவமனையின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் முகமாக குறித்த மருத்துவ அதிகாரியின் இடமாற்றத்தை இடைநிறுத்தி மக்கள் நலனில் அக்கறை செலுத்தவேண்டும் என்று அவர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். (ச-3327)





கிளிநொச்சிக்கு

# சீன அரசாங்கத்தின் மீன்பிடி வலைகள்

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மீன்பிடி வலைகள் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 870 மீனவர்களுக்கு தலா 6 வலைகள் வீதம் 5 ஆயிரத்து 220 வலைகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ரமேஸ்கண்ணா தெரிவித்தார். (ச-45-113)

1 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி
அமரர் கந்தையா விவேகானந்தம்
(அம்பிகா ஐஸ்கிறீம் உரிமையாளர்)



கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

பிறப்பு 09.05.1961
இறப்பு 05.01.2024
குடும்பத்தினர்.
(CS/57004) J-1

# யாழ். உணவகங்களில் சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.25

நத்தார் மற்றும் புத்தாண்டுப் பண்டிகையை முன்னிட்டு யாழ். நகரிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை சுகாதாரப் பிரிவினரால் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

நகரில் ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ் வீதி, ஸ்ரான்லி வீதி போன்ற இடங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்களும் சோதனை செய்யப்பட்டன. வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சமன்பத்திரண, பிராந்திய தொற்று நோயியல் பிரிவு மருத்துவர் எமில் சுகிர்தராஜ், பிராந்திய தாய் சேய் மருத்துவர் இந்துயன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களைக் கொண்ட குழு இந்தப் பணியில் ஈடுபட்டது. (ச-45-17-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும்.

– முகமது நபி –


# அத்துமீறல் அழகல்ல!

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில், இந்திய மீனவர்களால் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய மீன்பிடிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமாயின், கச்சதீவை மீட்பதுதான் ஒரேவழி என்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது தமிழக ஆளும் கட்சியான திராவிட முற்போக்குக் கழகம். அத்துடன், இந்தியப் பிரதமர் மோடியுடன் இலங்கையின் ஜனாதிபதி அநுர குமார செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்கள் மீதான நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதற்காக, இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கட்சி வலியுறுத்தியிருக்கின்றது.

தி.மு.க.வின் தீர்மானங்கள் மற்றும் அறிக்கைகளின் பொதுமைப்படுத்தப்பட்ட வடிவம் என்னவென்றால், 'நாம் அத்துமீறுவோம்: நீங்கள் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடியுங்கள்' என்ற நிலைப்பாடுதான். தி.மு.க.வும் சரி, வைகோ, சீமான், எடப்பாடி, அன்பு மணி, அண்ணாமலை உள்ளிட்ட தமிழகத்தின் இதர தலைவர்களும் சரி, அனைவரும் அத்துமீறிய மீன்பிடியை தமது தார்மீக உரிமையாகவே பார்க்கின்றனர். அதையொரு பாரதூரமான குற்றச்செயல் என்ற பார்வையில் இருந்து அணுகுவதற்கும் சிந்திப்பதற்கும் அவர்கள் தயாரில்லை. இவர்களில் ஒருவரேனும், ஈழத்தமிழ் மீனவர்களின் நிலைப்பாட்டில் இருந்து இதுவரை சிந்தித்ததாக இல்லை. ஒரு நாட்டின் இறைமை என்பது அதன் கடல் எல்லைகளையும் உள்ளடக்கியதுதான். எனவே, இந்திய மீனவர்கள் மேற்கொள்ளும் அத்துமீறல் இலங்கையின் இறைமையுடன் நேரடித் தொடர்புடைய விடயம். ஒரு நாட்டின் வான் பரப்புக்கு மேலாக அனுமதி பெறாமல் விமானங்கள் பறக்க முடியாது. அவ்வாறான நிலைப்பாட்டில்தான், கடற்பாதுகாப்பும் அணுகப்படவேண்டும். இந்தப் புரிதல் இந்திய மீனவர்களுக்கும், அவர்களின் தலைமைகளுக்கும் இருக்கவேண்டும்.

இந்திய மீனவர்கள் இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் மட்டும் அத்துமீறலை மேற்கொள்ளவில்லை. பிராந்தியத்தில் உள்ள ஒவ்வொரு நாட்டுடனும் அவர்கள் இந்த விடயத்தில் முரண்படுகின்றனர். இந்தியாவின் பரம வைரியான பாகிஸ்தான்கூட, அத்துமீறிய மீன்பிடிக்காக பலநூறு இந்திய மீனவர்களைச் சிறையிட்டிருக்கின்றது. பாகிஸ்தானுக்கு அப்பாலுள்ள ஈரான்கூட அத்துமீறிய மீன்பிடிக்காக இந்திய மீனவர்களைக் கைதுசெய்கின்றது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள கச்சதீவைப் போன்று, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும், அல்லது இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையிலான கடற்பரப்பில் எந்தவொரு நிலப்பரப்பும் இல்லை. இதன்மூலம் புலப்படும் விடயம் என்னவென்றால், மீன்களைப் பிடிப்பதற்காக, இந்திய மீனவர்கள் எந்த நாட்டுக்குள்ளும் ஊடுருவுவார்கள், எந்த எல்லைக்கும் செல்வார்கள் என்பதே.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி, தமது இறைமைக்குட்பட்ட பகுதியில் உள்ள மீன்வளத்தை வழித்துத் துடைத்துவிட்டு, அந்நிய மண்ணுக்குள் அதன் வளங்களைச் சூறையாடுவது தகாது. இந்திய மீனவர்கள் அன்றாடம் திரும்பத்திரும்பச் செய்துவரும் விடயம் இதுதான். இவ்வாறான பாரதூரமான குற்றத்தைக் கண்டுகொள்ளாமல், அந்நிய நாட்டவர்களைச் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிக்குமாறு கூறிக்கொள்ளும் திராவிட முற்போக்குக் கழகம், தன் சொந்த மீனவர்களைக் கட்டுப்படுத்த வக்கற்று நிற்பதுதான் ஆச்சரியம். எமது வயிற்றைப் பசியால் நிரப்பும், இந்தக் கடைகெட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக சகிப்புத் தன்மையைக் காண்பிப்பதுதான் நல்லிணக்கம் என்றால், அதைச் செய்வதற்கு நாம் தயாரில்லை என்பதே விவாதமின்றிய ஒற்றைப் பதில்.



# இலங்கைக்கு மின்சாரம்: அதானி குழுமம் திட்டம்

## பங்களாதேஷ் எதிர்ப்பு

**கொழும்பு, டிசெ. 25**

**இலங்கைக்கு மின்சாரம் வழங்குவதற்கு அதானி நிறுவனம் முன்வந்துள்ளது என்றும், அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அதானி நிறுவனம் இந்தியாவின் ஜார்கன்ட் மாநிலத்தில் உள்ள கோடா மின்னுற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை பங்களாதேஷுக்கு வழங்கி வருகின்றது. ஆனால், பங்களாதேஷ் அரசாங்கம் அதானி நிறுவனத்துக்கு கோடிக் கணக்கான ரூபாவை நிலுவையில் வைத்து பணத்தைச் செலுத்தாமல் இழுத்தடித்து வருகின்றது.

இதையடுத்தே, பங்களாதேஷுக்கு அனுப்பும் மின்சாரத்தை, இலங்கைக்கு வழங்குவதற்கு அதானி நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்றும், அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. அதானி நிறுவனத்தின் இந்தத் திட்டத்துக்கு பங்களாதேஷ் அரசாங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், இது ஒப்பந்த விதி மீறல் என்றும் சாடியுள்ளது. பங்களாதேஷுக்கு வழங்கப்படும் மின்சாரம் இலங்கைக்கு மாற்றப்படுமானால், அதானி நிறுவனத்துக்கு எதிராகச் சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் பங்களாதேஷ் அரசாங்கம் மேலும் கூறியுள்ளது. (ம-இ)

# ஜா-எல வில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, டிசெ. 25

ஜா-எல பகுதியில் வீடொன்றின் மீது துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒருவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் குறித்த வீட்டின் பிரதான நுழைவாயில் மற்றும் சுவர்கள் சேதமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜாஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# தேசிய வருமானத்தில் பதிவானது அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 25

ஏற்றுமதி மேம்பாட்டு வாரியத்தின் கூற்றுப்படி, இந்த வருடம் நவம்பர் மாதத்துக்கான ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் நாட்டின் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான ஏற்றுமதிகள் ஆயிரத்து 269 மில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளது. இது கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 0.04 வீத அதிகரிப்பு என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-இ)

# தேங்காய் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.25

தேங்காய் மற்றும் அதனுடன்தொடர்புடைய பொருள்களின் ஏற்றுமதி வருமானம் கடந்த நவம்பர் மாதத்தில் 13.8 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இதன்படி. 70 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

# திரைப்பட கூட்டுத்தாபன தலைவராக இயக்குநர் சுதத்

கொழும்பு, டிசெ. 25

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக மூத்த திரைப்பட இயக்குநர் சுதத் மஹதிவுல்வெள நியமிக்கப்பட்டுள்ளார். டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ம-இ)



# சிங்களப்பாடகர் சூரியசேன காலமானார்

கொழும்பு, டிசெ. 25

பழம்பெரும் சிங்களப் பாடகர் ப்ரியா சூரியசேன தனது 80 ஆவது வயதில் காலமானார். கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வியாழக்கிழமை - மார்கழி - 11
26.12.2024
சுபநேரம் : 07.57 - 09.27
ராகுகாலம் : 01.57 - 03.27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

25.12.2024
புதன்கிழமை

நான் சிறந்தவன் என்று கூறியிருக்கிறேன்; ஒருபோதும் நான் புத்திசாலி என்று சொன்னதில்லை.

- முகம்மது அலி



# அதிசயங்கள் நிறைந்திருந்த ஆண்டவனின் பிறப்பு

■ அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்

ஒவ்வொரு குழந்தையின் பிறப்பும் அதிசயமும், அற்புதமும் நிறைந்தது. இயேசுவின் பிறப்பு முழு உலகிற்கும் அதிசயமான, அற்புதமான நிகழ்வாக அமைந்திருந்தது. கன்னியாக இருந்த மரியாள் ஆணின் துணை இல்லாமல் குழந்தையைக் கருத்தரித்தது, விண்ணகத் தூதர்கள் கானம் இசைத்தது, இடையர்களுக்கு நள்ளிரவில் இயேசுவின் பிறப்பின் செய்தி அறிவிக்கப்பட்டது, கீழ்த்திசை ஞானிகள் பாலனைத் தேடிவந்தது, வானத்தில் விண்மீன் தோன்றியது, அப்பாவிக் குழந்தைகள் கொலையுண்டது, திருக்குடும்பம் அகதியாக எகிப்துக்குத் தப்பி ஓடியது என்று எல்லாமே அதிசயமும், அற்புதமும் நிறைந்த திகிலூட்டும் சம்பவங்கள் ஆகும். அபூர்வமான, ஆச்சரியங்கள் நிறைந்த இயேசுவின் பிறப்பு நிகழ்வுகள் சிலவற்றை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அணுகுவதும் அவை இன்று நமக்குத் தரும் வாழ்வியல் சிந்தனைகளை, வாழ்க்கைப் பாடங்களைக் கண்டுகொள்வதும் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## கணக்கெடுப்பில் திருக்குடும்பம்

நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த மரியாவை அழைத்துக் கொண்டு யோசேப்பு தாவீதின் ஊரான பெத்தலேகேமுக்குச் சென்றார். 'அக்காலத்தில் அகுஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தான்' (லூக். 2:1). ஆகவே மக்கள் தங்கள் பெயரைப் பதிவுசெய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச்சென்றனர். உரோமை அரசாட்சியில் 14 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்றது. இராணுவ சேவைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கவும், வரிவசூலை முறைப்படுத்தவும், மக்கள் தொகைக்கணக்கு எடுக்கப்பட்டது. யூதர்கள் உரோமையரின் இராணுவ சேவையில் தம்மை இணைத்துக்கொள்வதில்லை. ஆயினும் வரி செலுத்தியாக வேண்டும். இதன் நிமித்தம் யூதரும் இந்தக் கணக்கெடுப்பில் பங்கெடுக்கவேண்டியதாக இருந்தது. 'தாவீதின் வழிமரபினரான யோசேப்பும், தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு பெயரைப் பதிவுசெய்ய கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்தலேகம் ஊருக்குச் சென்றார். மரியா கருவுற்றிருந்தார். (லூக். 2: 4 - 5).

யோசேப்பும் மரியாவும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பிற்காகச் செல்கின்றனர். ஒரு நல்ல குடிமக்களாக அரசின் ஆணைக்குக் கீழ்படிகின்றனர். மரியா நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கும் நிலையில் பயணம் செய்வது ஆபத்தானது என அறிந்திருந்தும் கணக்கெடுப்பில் கலந்துகொள்ள நீண்ட தூரம் பயணம் செய்கின்றனர்.

## தீவனத்தொட்டியில் தேவமைந்தன்

நாசரேத்திலிருந்து பெத்தலேகமுக்குச் செல்ல மூன்று நாட்கள் பயணம் செய்ய வேண்டும். ஏறக்குறைய 80 மைல் தூரம் சென்று அவர்கள் பெத்தலேகமை அடைந்தனர். அங்குள்ள ஒரு சிறிய மாட்டுத் தொழுவத்தில்தான் இயேசு பிறக்கின்றார். பெத்தலேகமில் இது சாதாரண மக்கள் வாழும் பகுதி. ஆடு மாடுகளின் கூடாரம். ஐந்தறிவு உயிர்கள் அலைமோதும் அணிவகுப்புப் பகுதி. ஆடுகளைக் காவல் காக்க நகரத்தில் இருந்து தூரத்தில் தெரிவுசெய்யப்பட்ட இடம். நாகரீகம் எட்டிப்பார்க்காத எளிய மக்களின் இருப்பிடம். கண்விழித்துக் காத்திருக்கும் இடையர்கள் கூட்டமாக வாழும் பகுதி. இப்படி எளியவர் வாழும் பகுதியைத்தான் இயேசு தமது பிறப்பின் இடமாகத் தெரிவுசெய்தார். பெத்தலேகம் என்ற சொல்லுக்கு 'அப்பத்தின் வீடு' என்பது பொருள். உலகின் உணவாய் வந்த இயேசு இங்கேதான் பிறந்தார். தொழுவத்தில் இருக்கும் ஆடு மாடுகளுக்கு உணவளிக்க பயன்படும் தீவனத்தொட்டியில் இயேசு கிடத்தப்பட்டதும் ஒரு முன்னடையாளமே. ஏனெனில், 'விண்ணகத்தில் இருந்து இறங்கிவந்த உணவு நானே' என்று கூறிய இயேசு தாம் பிறக்கும்போதே உணவு வழங்கப்படும் தீவனத்தொட்டியில் பிறந்தார்.

இயேசு வாழ்வுதர வந்தவர். வாழ்வைத் தரவந்தவர் மட்டுமல்ல உலகத்தின் மீட்புக்காக தன்னையே முற்றிலும் தாரைவார்த்துத் தந்தவர். இந்த இயேசுவின் சீடனாக, சீடத்தியாக வாழ அழைக்கப்பட்ட நான் எந்தளவுக்கு எனது சுயநல எல்லைகளைக் கடந்து மற்றவர்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறேன் என்ற கேள்வி முக்கியமானது.

## இடையர்கள் பெற்ற இன்பச்செய்தி

இயேசு பிறந்தவுடன் அந்தச் செய்தி முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. (லூக். 2:10 - 12). ஆடுமாடுகளை மேய்க்கும் இடையர்கள் அன்றைய யூத சமுதாயத்தில் கடைநிலைச் சமூகமாகவே கணிக்கப்பட்டவர்கள். அன்றைய மேட்டுக்குடி வர்க்கத்தால் ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள். இவர்கள் நகர விளிம்பிற்கு வெளியே நடமாடியவர்கள். இவர்கள் ஏழைகள், எளியவர்கள், இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தவர்கள். இத்தகைய பாமர மக்களுக்குத்தான் உலகமே எதிர்பார்த்துக் காத்துக்கிடந்த மெசியா தனது முதல் தரிசனத்தைக் கொடுத்தார்.

தமக்காக ஒரு மீட்பர் பிறந்திருக்கிறார் என்ற செய்தியை அறிந்ததும் அவர்கள் உடனே புறப்பட்டார்கள். தாம் காவல் காத்துக்கொண்டிருந்த ஆடுகளைக்கூட அவர்கள் என்ன செய்தார்கள் என்று நமக்குத் தெரியாது. விரைந்து வந்து இயேசுவைக் கண்டு மகிழ்ந்தார்கள். இயேசுவை அறியாத இடையர்கள் இயேசுவைப்பற்றி கேள்விப்பட்டதும் அவரைப்பற்றி அறிய விரும்பினார்கள். அவரைச் சந்திக்க விரைந்தார்கள்.

இயேசுவை அறியவேண்டும், தெரிய வேண்டும் என்ற இந்த இடையர்களின் அக்கறையும் ஆர்வமும், அவசரமும் இன்று நம்மிடம் இருக்கின்றதா? இடையர்களைப்போல் நாமும் இயேசுவை அறிய ஆவலாக இருக்கின்றோமா? ஆலயத்தில், நற்கருணையில், இறைவார்த்தையில், செபத்தில் நாம் இயேசுவைச் சந்திக்கின்றோமா? தேவையில் இருக்கும், துன்பத்தில் வாடும் சக மனிதரில் நாம் அவரைக் காணுகின்றோமா?

## கானம் பாடும் வானதூதர்கள்

ஒரு குழந்தை பிறக்கும்போது அருகில் இருப்பவர்கள் சூழ்ந்து கொள்வதும் பாடுவதும் இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சியாகும். இயேசு பிறந்தவுடன் வானகம் மகிழ்ந்துகொண்டது. விண்ணகத்திலிருந்து வானதூதர்கள் பேரணி அந்தத் தூதர்களுடன் சேர்ந்து, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக.

உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதியும் உண்டாகுக' என்று கடவுளைப் புகழ்ந்தது' லூக். 2:13 - 14). இதுதான் இந்த உலகத்தில் ஒலித்த முதல் கிறிஸ்மஸ் செய்தி. இச்செய்தி ஆழமான அர்த்தம் நிறைந்ததொன்று.

இயேசுவின் பிறப்பு மன்னுயிர்க்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் ஓர் அரிய நிகழ்வு. அது இந்த உலகிற்கு அமைதியையும் சமாதானத்தையும் கொண்டுவந்த நிகழ்வு. 'உலகில் அவருக்கு உகந்தோருக்கு' மட்டுமே அமைதி வாக்களிக்கப்படுகிறது. பழைய மொழிபெயர்ப்பில் 'நல்மனத்தோருக்கு' என்று கூறப்பட்டுள்ளது. இன்று கிறிஸ்து பிறப்பு விழா வெறும் ஆடம்பர விழாவாக, வர்த்தக விழாவாக மாறிவிட்டது. உள்ள அமைதி இழந்து, சமாதானம் இழந்து அலைக்கழிக்கப்படும் இன்றைய மானிடருக்கு அமைதியை சமாதானத்தை வழங்கும் சமாதானப் பிரபுவாக இயேசு வந்தார். ஆனால் இந்த உலகம் அந்த அமைதி சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இன்று தவிக்கின்றது, தள்ளாடுகின்றது.

## நிறைவுரை

பாலன் பிறந்த பலஸ்தீன நாடு புவிகோளத்தின் பரப்பில் புறம்பே தள்ளப்பட்ட ஒரு பாலைநிலப் பகுதியாகும். வறண்டது, வளமற்றது, சிறியது. உரோமையர், கிரேக்கர் எல்லோரும் பாதம் பதித்து விடுதலை தராது அடிமைப்படுத்திய இடம். தாழ்ந்த நிலம், விளிம்புப் பகுதி என்றெல்லாம் சொல்லலாம். இந்த பலஸ்தீன மண்ணில் தோன்றிய இயேசு இந்த உலகத்தின் பாவ விடுதலைக்கு, சாப விடுதலைக்கு வழிகோலினார். திருக்குடும்பத்தைப் பின்பற்றி நாமும் பொறுப்புள்ள நற்பிரசைகளாக வாழுவோம். இயேசுவின் அர்ப்பணத்தைப் பின்பற்றி சுயநலம் களைந்து பிறர்நலம் நாடுவோம். இடையர்களைப்போல இயேசுவை அறிவோம், அவரை மற்றவர்களுக்கு அறிவிப்போம். வானதூதர்கள் வாழ்த்திப் பாடிய அமைதி சமாதானத்தை எமதாக்குவோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# ‘உண்மையின் தரிசனம்’ நாட்டுக்கூத்து

யாழ்ப்பாணம், டிசெ.25

காவேரி கலாமன்றத்தின் தயாரிப்பில் ‘உண்மையின் தரிசனம்’ நாட்டுக்கூத்து நிகழ்வு யாழ்ப்பாணத்தில் மேசியா பூரண சுவிசேஷ சபைத் தேவாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

காவேரி கலாமன்றத்தின் இயக்குநர் யோசுவாவின் எழுத்தாக்கம் மற்றும் நெறியாக்கத்தில் இந்த நாடகம் அரங்கேற்றப்பட்டது. (ச-45-27)

## நவநாத சித்தர் குருபூசை

யாழ்ப்பாணம், டிசெ.25

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், நவநாத சித்தர் சுவாமிகள் குருபூசை விழாவும் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சமூகமாமணி கலாநிதி பா. தனபாலன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதில் இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் ‘வணங்க வேண்டிய நவநாத சித்தர் சுவாமிகள்’ எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச-45)

## நத்தார் பண்டிகை வர்த்தகம் மந்தகதி

யாழ்ப்பாணம், டிசெ. 25

நத்தார் பண்டிகைக்கால வர்த்தகங்கள் மந்தநிலையில் இடம்பெறுவதாக யாழ்ப்பாண நகரப் பகுதி வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆட்சி மாற்றம் இடம்பெற்றிருந்தாலும் பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் இனிப்பு பண்ட வியாபாரிகளின் வர்த்தகமானது சிறந்த முறையில் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விழி இழந்த, இசைக்குயில்களுக்கு வழிகாட்டிட வாரீர்!

■ நி.பிரதிகா

*"பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந் தாள் வினை இன்மை பழி"*

உடல் உறுப்புகள் செயலற்றவையாக இருப்பது குற்றமல்ல. அறிய வேண்டியவற்றை அறிய முயற்சிக்காமல் இருப்பதே குற்றமாகும் என்கிறார் வள்ளுவர்.

கலை எம்மோடு கலந்து பிறந்த பாரம்பரிய உணர்வாகும். அதனை கற்கவோ, புரிந்து கொள்ளவோ, உணரவோ, நாம் ஊனமற்றவர்களாக இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எமது விழிப்புலனற்ற உறவுகள் நிரூபித்துக் காட்டியுள்ளனர். யாழ்.வீனஸ் தனியார் மருத்துவமனையினரின் வருட இறுதிக் கொண்டாட்ட நிகழ்வு யாழ். தனியார் விடுதி ஒன்றிலே அண்மையில் இடம்பெற்றது. இதன்போது விஷேட அம்சமாக விழிப்புலனற்றோர் சங்கத்தினரால் இசை நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. கரோக்கி இசையின் உதவியுடன் தமது பாடும் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். கண்ணில்லாதோரின் அந்த இசை நிகழ்வு அங்கிருந்த ஏனையோருக்கு கண்கொள்ளாக் காட்சியாகவே அமைந்தது. சாதாரண கலைஞர்களுக்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு அவர்களின் வளமான குரலில் பல பாடல்கள் அங்கே ஓங்கி ஒலித்தன. கண்ணைக் கொடுக்கத் தவறிய போதும் அவர்களுக்கு கலை ஆற்றலை கொடுத்ததை எண்ணி நாம் இறைவனை மெச்சவேண்டும். எந்தவொரு இசை வாத்தியங்களின் துணையுமின்றி, இசைஞானிகளின் பயிற்றுவிப்பின்றி தமது சுயமுயற்சியில் அவர்கள் நிகழ்த்திய இசை நிகழ்வு ஒரு வரலாறாகும்.

இலங்கையில் பல பாகங்களிலும் ஊனமுற்றோரை ஊக்குவிக்கின்ற பல்வேறு விதமான நிகழ்ச்சித் திட்டங்கள், பாதயாத்திரைகள், கலை நிகழ்வுகள் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கையைப் பொறுத்தவரை சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு அதிகமானோர் விழிப்புலன் அற்றவர்களாக உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. விழிப்புலனற்ற மனிதர்களின் மீது உலக மக்களின் கவனம் ஈர்க்கப்பட வேண்டும் என்பதற்காக வெள்ளைப்பிரம்பு தினத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் காண்கிறோம். அந்தவகையில் வீனஸ் தனியார் மருத்துவமனை விழிப்புலனற்றோருக்கு வழங்கிய இந்த இசை வாய்ப்பு பாராட்டத்தக்கது. இதுபோல இனி வரும் காலங்களிலும் அவர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைக்கும் வண்ணம், மெருகூட்டப்பட்ட கலைநிகழ்வுகள் வட மாகாணத்தில் பரவலாக நடத்தப்பட வேண்டும். கண்தெரியாவிடினும் கல்வியிலும், கலையிலும் சிறந்து விளங்குவோரின் வாழ்வு மேம்பட அனைவரும் ஒன்றுபட்டு உதவ வேண்டும். தமது திறமைகளை வெளிப்படுத்திய விழிப்புலனற்றோர் சங்கத்தின் பாடல்களை கொண்ட குழுவினருக்கு இசைக்கருவிகள் மற்றும் ஏனைய இதர செலவுகளுக்கான நிதியுதவிகள் வழங்கப்படுமாக இருந்தால் அவர்கள் இசையுலகில் பேர் சொல்லும் கலைஞர்களாக உருவாகுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதற்கான பாதையை நாம் உருவாக்கி கொடுத்தாலே போதும், அதில் அவர்களாகவே பயணித்து வெற்றி இலக்கை அடைவார்கள். பார்வையிழந்தோரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களை உதாசீனம் செய்யாத ஒரு சமூகத்தை உருவாக்க கைகோர்ப்போம்.

■ வாஸ் கூஞ்ஞ





# மன்னாரில் வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டுப் பெருவிழா மன்னார் நகரசபை மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.



வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மன்னார் பிரதான பாலத்தில் இருந்து பண்பாட்டு ஊர்திகள் மற்றும் கலை ஆற்றுகைகள் பண்பாட்டு பவனியாக நகரசபை மண்டபம் நோக்கி வருகை தந்ததுடன், விருந்தினர்களால் பாரம்பரிய பொருள்கள் கண்காட்சி தொடங்கி வைக்கப்பட்டு பார்வையிடப்பட்டது. பெருவிழாவில் தமிழ்த் தாய் வாழ்த்து, மங்கள இசை, வரவேற்பு நடனம், இசை நிகழ்வு, கண்டிய நடனம், றபான் நடனம், உழவர் நடனம், வாள் நடனம் உள்ளிட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வின் ஒரு பகுதியாக, 'வடந்தை 2024' எனும் நூல் வைபவ ரீதியாக வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக கலைக்குரிசில் விருது, 2023ஆம் ஆண்டிற்கான வடக்கு மாகாண சிறந்த நூலுக்கான பரிசு மற்றும் இளங்கலைஞர் விருது உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவால்களை எதிர்கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்



பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்

கல்வி என்பது கட்டாயமானது. ஓர் இனத்தின் விடுதலை, அபிவிருத்திக்கு இன்றியமையாதது. ஒழுக்கமான சமூகத்தை உருவாக்க அத்தியாவசியமானது. அதுமட்டுமல்லாது சுய பொருளாதார விருத்திக்கும், இனத்தின் இருப்புக்கும் மிக முக்கியமானது. இதனை யாரும் மறுப்பதற்கு இல்லை. இன்று கல்வி அபிவிருத்தி அடைந்தபோதும் மாணவர்களின் நிலை மிகவும் மோசமான சவால்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. இதற்கு முதலாவது காரணமாக அமைபவர்கள் பெற்றோர். ஏனெனில் இன்றைய குடும்பங்களில் தந்தையும், தாயும் தொழில் புரிபவர்களாகக் காணப்படுவதனால் வீட்டில் பிள்ளைகளை பராமரிக்கும் சிரமத்துக்காக பாடசாலை நிறைவடைந்ததும் தனியார் கல்வி நிலையத்தில் விட்டுச் செல்கின்றனர். இங்கு பிள்ளைகள் பெற்றோரின் அன்பு, அரவணைப்பு, உரையாடல் இன்றி ஏங்கித்தவிக்கின்றனர். எனவே பெற்றோர் பிள்ளைகளுக்காக குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி, அவர்களுடன் மகிழ்ச்சியாகவும், அன்பாகவும் இருக்க வேண்டும். தொடர்ந்து பிள்ளைகள் ஒரே இடத்தில் ஒரே செயற்பாட்டைச் செய்யும்போது சிந்தனைத்திறன் குறைவடைகின்றது. இங்கு பிள்ளைகளுக்கான ஓய்வும், உறக்கமும் போதாதுள்ளது, ஒரே இடத்தில் இருப்பதால் அசைவுத்திறன் குறைவடைகின்றது. வயதிற்கேற்ப பருவச் செயற்பாடுகள் இல்லாது போகின்றன. இதன் விளைவாக மகிழ்ச்சியைத் தொலைத்து தொலைதூரம் பயணிக்கின்ற ஒரு செயற்பாடாகவே கல்விச் செயற்பாடு அமைகின்றது.

வாழ்க்கையை பொறுத்தவரையில் ஒவ்வொரு பருவமும் முக்கியமான பருவம். அது ஒவ்வொன்றையும் அனுபவித்துக் கொண்டு சென்றால்தான் எதிர்காலம் சிறப்பாக அமையும். பெற்றோர் மிகவும் முக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டிய விடயம் பிள்ளைகளை சரியான முறையில் கவனித்துக் கொள்ளல், அவதானித்துக் கொள்ளல், அன்பு கலந்த கண்டிப்பு, தன் மீது அக்கறையாக பெற்றோர் உள்ளனர் என்பதை உணரச்செய்தல், தனது நன்மைக்காக எல்லா விடயங்களையும் செயற்படுத்துகின்றனர் என்ற நம்பிக்கையை பிள்ளைக்கு ஏற்படுத்தல் என்பன இன்று மிகமிக அவசியமாகின்றன. அன்பு, நம்பிக்கை, பொறுப்பு என்பவற்றை உரையாடுவதன் மூலம் உணர்த்துதல், சமூக சவால்களை எடுத்துரைத்தல், பிள்ளைகளைத் திட்டுவதைத் தவிர்த்தல், பிள்ளைகளுக்காக பெற்றோர் கஷ்டப்படுகின்றார்கள் என்பதை உணரச்செய்தல் வேண்டும். பணம் இருந்தால் சரி என்ற மனநிலையை பிள்ளைகளுக்கு உருவாக்கிவிடக்கூடாது. அது ஆபத்தானது.

குடும்பத்துக்கு அடுத்தபடியாக பிள்ளைகள் தமது நேரத்தை அதிகளவு செலவிடும் இடம் பாடசாலை. இங்கு கல்வியுடன் இணைபாடவிதான செயற்பாடுகளும் ஏனைய பண்புவிருத்தி செயற்பாடுகளும் மாணவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். பாடசாலை நிர்வாகம் என்பது மாணவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டி பாடசாலைக் கல்வியுடன் எல்லா விடயங்களையும் எனக்குத் தருகின்றது என்ற பூரண நிலையை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு ஆசிரியனும் கற்றல் செயல்பாட்டின்போது பிள்ளைகளை கையாளுகின்ற தன்மையில் ஆசிரியன்பால் பிள்ளைகள் கவர்ந்து இழுக்கப்பட வேண்டும். ஆசிரியன்மீது ஏற்படும் விருப்பமே அந்தப் பாடத்தின் மீது விருப்பத்தைத் தூண்டும். ஆசிரியர் மீதுள்ள வெறுப்பே அந்தப் பாடத்தின்மீது உள்ள விருப்பையும் ஆர்வத்தையும் குறைக்கிறது. பாடசாலை முடிவடையும்போது மாணவர்கள் எவ்வாறு மகிழ்ச்சியாக வெளியேறுகின்றனரோ பாடசாலைக்குள் உள்நுழையும்போதும் மாணவர்களின் முகங்களில் மலர்ச்சியும் மகிழ்ச்சியும் இருந்தால் அதுவே சிறந்த பாடசாலை. அங்கு கல்வியுடன் ஏனைய இணைபாடவிதான செயல்பாடுகளும் உயர்ந்த நிலையில் காணப்படும்.

இன்று பல வீடுகளில் மாணவர்களுக்கான உணவு சரியான முறையில் கிடைப்பதில்லை. அவசரத்தில் விரைவு உணவுகளையும் பதப்படுத்தப்பட்ட உடனடி உணவுகளையுமே அதிகம் உண்ணுகின்றனர். அதுவும் சரியான நேரத்தில் உட்கொள்வதில்லை. அதுமட்டுமல்லாது மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை வழங்காது இறுக்கமான சூழலை உருவாக்கி வைத்திருப்பது மாணவர்களுக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

பாடசாலை பௌதீக சூழலும் மாணவர்கள் விரும்பத்தக்க வகையில் உருவாக்கப்படவேண்டும். அதாவது வகுப்பறை அமைப்பு, சிற்றுண்டிச்சாலை, கழிப்பகம், ஓய்வு எடுக்கக்கூடிய சூழல், ஆன்மீக செயல்பாடு, பொழுதுபோக்கும் இடம், நூலகம் என்பன சரியாக இருத்தல் வேண்டும். மாணவர்கள் சவால்களை எதிர்க்கவும், எதிர்கொள்ளவும் நாம் உரிய வழிகாட்டல்களை வழங்கும்போதுதான், அவர்களிடம் இருந்தும் சிறப்பான செயற்பாடுகளை எதிர்பார்க்க முடியும்.

# நவீன யுகத்தினை வெற்றிகொள்ள உடன் செயற்படுவது அவசியம்

பத்மசேனன் சனோசன் (பி.ஏ.)



15

இதை வாசிக்கும் நீங்கள் ஒரு மாணவராக இருந்தால் உங்கள் நிலையை எண்ணிப் பாருங்கள். நாளாந்தம் எமக்குத் தரப்படும் பாடங்களை உடனுக்குடன் கற்று முடித்தால் பரீட்சைக்கு நாம் பெரிதும் சங்கடப்பட்டுக் கற்க வேண்டிய தேவை இருக்காது. ஆனால் நாம் என்ன செய்வோம் பரீட்சைக்கு நாட்கள் இருக்கிறது தானே, பரீட்சை வரும் போது பார்ப்போம் என்று அசமந்தமாக இருந்துவிட்டு,பரீட்சைக்கு முதல் நாள் முழுவதும் கற்றுவிட வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும்போது நிச்சயம் பெரும் குழப்பமான நிலைக்கு மனது தள்ளப்பட்டுவிடுகிறது. அவ்வாறு ஒரு நாளில் கல்வி கற்று, நினைத்த உயர் சித்தியை, எமது கனவு சித்தியை எவ்வாறு அடைவது? பரீட்சையில் முதல் நிலை பெற்றவர்கள், கல்வியில் உயர் சித்தி பெற்றிருந்தவர்கள் இந்த வெற்றி விதியினை கச்சிதமாக பின்பற்றியுள்ளார்கள்.

அவர்கள் நாளாந்தம் கற்க வேண்டிய விடயங்களை அன்றைய நாளிலேயே கற்று முடித்துவிடுகிறார்கள். அதனால் அவர்கள் பின்னாளில் சங்கடப்படவோ, குழப்பம் அடையவோ தேவையில்லை. அதனால்தான் அவர்கள் வெற்றி பெற்று இருக்கிறார்கள் என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுங்கள்.

அதேபோல் எமது தனிப்பட்ட இலக்கு, வெற்றிக்கான நேரத்தைச் செலவழிக்கப் போதுமான நேரத்தை உருவாக்கிக் கொள்ளலாம். இதனை இவ்வளவு காலமும் கவனத்தில் கொள்ளாது இருந்திருந்தால், இன்றிலிருந்தாவது நாம் அதனை கடைப்பிடிக்க முயற்சி செய்வோம். இல்லையேல் நாளாந்தம் நாம் மன நெருக்கடியில் துவள வேண்டிய நிலைதான் ஏற்படும். அந்த நேரத்தில் செய்யவேண்டிய காரியத்தினை அந்த நேரத்திலேயே செய்து விடுவதுதானே சிறந்தது. இந்த வெற்றி விதியினை எவ்வாறு நாம் பயன்படுத்துவது? நாம் இந்த பூமியில் பிறந்துவிட்டோம். எப்படி வாழ வேண்டும் என்பதனை தீர்மானிக்க வேண்டும். எமது வாழ்க்கை மாறவேண்டும் என்றால், இதனை நாம் மாற்ற வேண்டும். உரிய நேரத்தில் அந்த காரியத்தினை செய்து முடித்துவிட வேண்டும் என்ற உந்துதலை என்னுள் எப்போதும் ஏற்படுத்திக்கொண்டு இருக்க வேண்டும். இவ்விதி எங்கள் வாழ்வில் பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தவல்லது. எனவே மன ரீதியான நெருக்கடியில் இருந்து விடுபட்டு. வாழ்வை வெற்றிகொள்ள உடன் செயற்படுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவம் கூறும் நல்லாட்சி

'கலாவிபூசணம்'
**இரா.நிஷாந்தன்**
*ஆசிரியர்*

ஒரு நாட்டை ஆளும் அரசன் சிறப்புற ஆட்சி புரிவது அவசியமானது. செங்கோன்மையுடன், சிறந்த அறிவுடையவனாக, குடிமக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் சிறப்பான திட்டமிடல் மற்றும் தனது வீரத்தையும், செயற்றிறனையும் வெளிப்படுத்தி நல்லாட்சி புரிவது அரசனின் கடமையாகும். அரசன் ஒருவன் நிறைவான கல்வி அறிவோடு, குற்றங்களை நீக்கி, அறிவில் சிறந்த பெரியோரைத் துணையாகக் கொண்டு, சிற்றினம் சேராமல், ஆராய்ந்து செயலாற்றி, சுற்றத்தவருடன் சேர்ந்து, வலிமையான படைமாட்சியுடன் தன் அரசாங்கத்தை நடத்துவதே மேன்மை பொருந்தியது என்பதை திருவள்ளுவர் திருக்குறளில் அழகுற காப்பியம் செய்கின்றார். பொருட்பால் அதிகாரத்தில் அரசியல் எனும் பகுப்பில் அரசனது ஆட்சி பற்றிய கருத்துரைக்கின்றார் வள்ளுவர்.



## அரசனின் இலக்கணம்

வலிமை மிக்க படை, சிறந்த குடிமக்கள், குறைவில்லாத செல்வம், அறிவில் சிறந்த அமைச்சு, ஆபத்தில் உதவும் நட்பு, அழிக்க இயலாத காவல் அரண் என்று சொல்லப்படுகின்ற இந்த ஆறு அங்கங்களையும் திறம்படக் கொண்டிருக்கும் அரசனே அரசர்களுக்கும் ஆண் சிங்கம் போன்றவன் என்கின்றார் வள்ளுவர். இதனை,
படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு எனும் குறளின் வழி காணமுடிகின்றது.

அநீதிக்கும், பகைவருக்கும் அச்சம் கொள்ளாமல் இருப்பதும், வேண்டுவோர்க்கு இல்லை என்று கூறாது பொருள் கொடுப்பதும், ஆபத்து வருவதை முன்னரே அறியும் அறிவாற்றலும், ஆபத்து வரும் போது தளராத மனநிலையும் என இந்த நான்கிலும் குறைவில்லாமல் இருப்பதே அரசன் ஒருவனின் இயல்பாகும் என்பதை,
அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு என வள்ளுவர் கருத்துரைக்கின்றார். இவற்றுடன் காலம் தாழ்த்தாமல் விரைவாகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை செய்தலும், திட்டமிடலுக்குரிய உயரிய கல்வியறிவும், எந்தச் செயலையும் ஆற்றக்கூடிய துணிவும் என இவை நாடாளும் அரசனுக்குரிய நீங்காத பண்புகளாகும் என்பதையும் வள்ளுவர் இங்கு கருத்துரைக்கின்றார். நீதி வழி தவறாது நல்லாட்சி நடத்தி தன் கீழுள்ள குடிமக்கள் துன்பம் கொள்ளாதவாறு காப்பாற்றுகின்ற ஓர் அரசன் மக்கள் குறை போக்கிய தலைவன் என்று கருதி அனைவராலும் தனியே மதிக்கப்படுவான் என்கின்றார் வள்ளுவர்.

முறை செய்து காப்பாற்றும் மன்னவன்
மக்கட்கு இறை என்று வைக்கப்படும்
எனும் குறள் வழி காணலாம்.

## பெரியோர் துணை

அரசன் ஒருவன் தன்னை அறவழியில் வழிநடத்தக்கூடிய அறிவில் சிறந்த பெரியோரைத் தன் துணையாகக் கொண்டிருப்பது உயர்வுடைய சிறப்பினை அவனுக்குக் கொடுக்கும் என்கின்றார் வள்ளுவர். அறத்தினை முழுமையாக உணர்ந்தவராய், தன்னை விட மூத்தவராய் உள்ள அறிவுடையாரது நட்பினை அரசன் எப்போதும் துணையாகக் கொண்டிருக்கவேண்டும்.

அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்து கொளல்

இந்தப் பெரியோரே அரசனுக்கு நல்ல துணையாக விளங்கும் அமைச்சன் என்றும் அழைக்கப்படுகின்றான். அரசன் தவறு செய்யும் போது அதனை கடிந்து அச்செயலை இவ்வாறு செய்யாதே என அறிவுரை கூறுகின்ற பெரியாரை எப்பொழுதும் தன் துணையாகக் கொண்டுள்ள அரசனை அழிக்கும் ஆற்றல் கொண்டவர் யாரும் இல்லை என்கின்றார் வள்ளுவர். அதேநேரம் தவறைக் கடிந்து அறிவுரை கூறும் பெரியோர் இல்லாத அரசன் யாருடைய பகையும் இன்றித் தானாகவே அழிந்து போய்விடுவான் என்பதையும் வள்ளுவர் குறள் வழி அறிவுறுத்தியுள்ளார்.

## ஆராய்ந்து செயலாற்றுதல்

அரசன் ஒரு செயலை ஆற்றுவதற்கு விரும்பினால் அதனைத் தொடங்குவதற்கு முன்னர் அதனால் வரும் பின் விளைவுகளை நன்கு ஆராய்ந்து அதன்படி அச்செயலைத் தொடங்க வேண்டும். எனவே ஒரு செயலைத் தொடங்கும் போது ஏற்படும் அழிவையும், அழிந்த பின் ஏற்படும் விளைவையும், அதன்பின் உண்டாகும் வருவாயையும் அரசன் ஒருவன் அறிந்துகொள்ள வேண்டும். மேலும் தனது வலிமையினையும், பகைவருடைய வலிமையினையும் ஆராய்ந்து செயற்படவேண்டியது அரசன் ஒருவனது கடமையாகும் என்பதையும் வள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

## அரசனுக்குத் துணையாகும் படை

ஓர் அரசனது ஆட்சியில் எல்லாவிதமான சிறப்புகளும் இருந்தாலும் அந்த ஆட்சி நிலைத்திருப்பதற்கு துணைபுரிவது அரசனின் படையே என வள்ளுவர் புலப்படுத்துகின்றார். பகைவரின் இடையூறுகளுக்கு அஞ்சாமல் வெற்றிவாகை சூடும் படையைக் கொண்டிருக்கும் அரசன் எல்லாவிதமான செல்வங்களையும் பெற்றவனாகின்றான். மேலும், எமனே கோபம் கொண்டு தம்மை எதிர்த்து வந்தாலும் ஒன்றாகத் திரண்டு வலிமையோடு அந்த எமனையே எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்ற படையை ஓர் அரசன் பெற்றிருக்கவேண்டும் என்பதையும் வள்ளுவர் குறள்வழி வெளிப்படுத்துகின்றார்.

# ஒன்றிடு நாளை வென்றிடு



மானிடனே விழியடா
மாண்ட புகழ்தனை
மீட்டிட எழுந்திடடா
மறவர் செயலினை
மாய்த்துக் கொள்ளடா
போதை நீக்கடா
பேதமை அகற்றடா
வண்ணப்பூச்சால் மயக்கிடும்
பெண்டிர்கள் தேவையா
அரைகுறை ஆடையால்
அரையைக் காட்டிடும்
விபச்சாரிகளை அழியடா
மூதாதையர் வளர்த்த
மூத்ததமிழன் நீயடா
மானம் அழித்து
வானம் எட்டிடுவாயா
வாழப் பிறந்தாயா
வாளால் இறப்பாயா
இப்படி போனால்
எப்படி வம்சத்தை
வளர்த்து எடுப்பாய்
வளர்ச்சி காண்பாய்
பொறுத்தது போதும்
பொங்கி எழடா
பண்பாட்டை வளர்க்க
கலாசாரத்தை காக்க
நம்மவர் அழிந்தால்
நமக்கே அழிவு
யோசி இதை
வாசி நன்றாய்
ஒன்றிடு நாளை
வென்றிடு மறவை

**சகாதேவன் ரஜனிமாலா**

புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலையினால் வழங்கப்படும் சேவைகளுள் முதியோர்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் சேவையும் ஒன்றாக உள்ளது.

**யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தனித்துவமான முதியோர் இயல்பு வாழ்வு இல்லம்**

இவ் இல்லமானது!..

- மலசலகூட வசதிகளோடு இணைந்த அறை
- 24 மணி நேர வைத்திய சேவை
- 24 மணி நேர தாதிய சேவை
- ஊட்டச்சத்தான சைவ, அசைவ உணவுகள்
- பொழுதுபோக்கு வசதிகள், சொகுசு இருக்கைகள்
- Physiotherapy வசதிகள்
- ஆலய தரிசனம்

ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

100% மருத்துவ பராமரிப்பின் கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய முதியோர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட அறைகள் மட்டுமே உள்ளன

முற்பதிவுகளுக்கு : **முதியோர் இல்ல பொறுப்பதிகாரி** : 077 070 9617

**தலைவர்** - 077 238 0196

**தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை**
**தெல்லிப்பளை (துர்க்கை அம்மன் கோவில் முன்பாக)**

(cr.43964) (N.1)



# அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம் (ASR WEDDING HALL)

## முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்

எமது வாடிக்கையாளர்களுக்கு நத்தார் புதுவருட பண்டிகை நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

உங்கள் பிள்ளைகளின் திருமணம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவுத் திருமணங்கள், பிறந்தநாள் கொண்டாட்டம், பாடசாலை நிகழ்வுகள், அரச மற்றும் நிறுவனங்களில் நடைபெறவிருக்கும் நிகழ்வுகள் செய்ய விரும்புவோர்கள்

பதிவுகளை மேற்கொள்ள நாடவேண்டிய மண்டபம்
**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்.**

- திங்கள் தொடக்கம் வெள்ளிவரை கால 9.00 மணிமுதல் 4.30 மணிவரையும்.
- சனி காலை 9.00 மணிதொடக்கம் 12.30 மணிவரையும் மண்டபத்தை பார்வையிடலாம்.
- ஞாயிறு விடுமுறை

(cs.56857) (N-1)

**இல. 542, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 1355, 076 744 6064**


# பனை அபிவிருத்திச் சபை
## Palmyrah Development Board

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு

**Ministry of Plantation and Community Infrastructure**

Annual Registration-2025- Exporters, Auctioneers/Brokers, Palm Product Traders, Dealers and Shippers.

In terms of the provisions of the Coconut Development (Amendment) Act No. 24 of 1975 as amended under the Coconut Development Act No. 46 of 1971, All Palmyrah based Products Exporters, Auctioneer/ Brokers, Palm Product Traders and Dealers should Register/Renew themselves with the Palmyrah Development Board (PDB) annually.

Registration of Palmyrah based products by you / company in accordance with the above powers is done for the period 01.01.2025 – 31.12.2025.

Applications are now being received by the Palmyrah Development Board for registration of new applicants and renewal of registration of the above mentioned categories for the Year 2025.Applications could be downloaded from the PDB official Facebook page https://www.facebook.com/palmyrahdb/

There to you,

- * To minimize the problems that arises during the export of Palmyrah related products.
- * carrying out quality certification of Palmyrah related products by the Palmyrah Research Institute
- * Facilitates the efficient export process of Palmyrah products.

Action will be taken in future as per the powers vested in the Act regarding non-registration with the Palmyrah Development Board.

Duly completed applications for the above mentioned categories should be forwarded under Registered Post to the Marketing division indicating "Registration for the year 2025 at PDB" on the top left hand corner of the envelope on or before 10.01.2025

For further inquiries:
Office No: 021-222-2034,
Dr.B.Suthaharan: 076 023 3301,
Mr.P.Thavamanogaran: 077 742 6420
E-mail- slpdbmarketing@gmail.com

Chairman
Head Office,
Palmyrah Development Board,
Navatkuli - Kaithady,
Jaffna.

Marketing Division
Head Office,
Palmyrah Development Board,
Navatkuli - Kaithady,
Jaffna.

(cr.43965) (N-1)

# ரூபவாஹினி தலைவர் இராஜினாமா!

கொழும்பு, டிசெ.25

ரூபவாஹினி தொலைக் காட்சியின் தலைவர் பதவியில் இருந்து கலாநிதி செனேஷ் பண்டார திஸாநாயக்க இராஜிநாமா செய்துள்ளார். அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், கலாநிதிசெனேஷ் பண்டார திஸாநாயக்க ரூபவாஹினி தொலைக் காட்சியின் தலைவராக நியமிக்கப்பட்டார். கடந்த செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி நியமனத்தைப் பெற்றுக்கொண்டார். (எ-இ)

# மரண அறிவித்தல்

மலர்வு
03 . 01 . 1966



உதிர்வு
23 . 12 . 2024

**திருமதி ஜெயவீரசிங்கம் உமாதேவி**
(ஓய்வு பெற்ற ஆசிரியை-டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி)

யாழ் வரணியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட ஜெயவீரசிங்கம் உமாதேவி (ஓய்வு பெற்ற ஆசிரியை- டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி) அவர்கள் நேற்று முன் தினம் (23.12.2024) திங்கடகிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-கனகம்மா தம்பதியின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையா ஜெயவீரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் ஆதுஜன் (பிரான்ஸ்), ஜீவகன் (Doctor யாழ்/ போதனா வைத்தியசாலை), வைகுந்தன் (பிரான்ஸ்), ஆரூரன்(அவுஸ்ரேலியா), லாவண்யா (T.O. - University of Jaffna) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யசோதாயினி (பிரான்ஸ்), கஸ்தூரி (Doctor சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை), நிலக்சனா (கனடா), செழியன் (Q.S) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அகரன், தஞ்ஜீவ், அன்பிற்கினியாள், இன்னிசையா ஆகியோரின் பேர்த்தியும் ஜெகதீஸ்வரனின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2024) புதன்கிழமை அவ்ரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 01.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**56/3 பொற்கொல்லர் வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**Dr. ஜெ.ஜீவகன் (மகன்)**
**077 357 0730**

(CS 294888) P-1

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -24, ஆசீர்வாதம் ஒழுங்கை, 22 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல -22, ஆசீர்வாதம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சடாட்சரம் றெஜி புவனேந்திரனும், சடாட்சரம் புனிதரூபனும், தங்களது பிதாவழிப் பேரன் காலஞ்சென்ற கந்தையா காசிப்பிள்ளை ஆகியவரால் 1925ம் ஆண்டிலிருந்து ஆட்சிபண்ணப்பட்டு அவர் காலமாகிவிட தங்கள் பிதா காலஞ்சென்ற காசிப்பிள்ளை சடாட்சரம் அவர்களால் தொடர்ந்து எவ்வித தடையுமின்றியும் இடையூறுயின்றியும் ஆட்சிபண்ணப்பட்டு தொடர்ந்து தங்களால் நீண்டகாலமாக ஆட்சிபண்ணப்பட்டு வரும் ஆதனம் என குறிப்பிட்டு 12.07.2012ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 502ம் இலக்க சீதன உறுதி மூலம், அதேயிடத்தைச் சேர்ந்த தமது சகோதரியான செபரட்ணம் ஜெனதாஸ் பெண் தேவமனோகரிக்கு வழங்கியுள்ளனர்.

## ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, குருநகர் இறை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பகுதியில் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஜே /74 கிராம சேவகர் பிரிவில் உள்ள"வீரப்பத்திரபுலம் "இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் 12.07.2012ம் திகதியிட்டு வரைந்த 1053ம் இலக்கப் படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்ட விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று குளி மூன்று தசம் ஆறும்(நில.பர 01 குளி 3.6) கல்வீடும், கிணறும், மலகூடமும். **இதற்கு எல்லைகள்**

கிழக்கு - கனகையா செல்வராசாவுக்கும் பெண் சின்னக்குஞ்சுவுக்கும் உரிய ஆதனம்.
வடக்கு - திருமதி மேரி சறோஜா ஐஸ்ரினின் ஆதனம்.
மேற்கு - ஆசீர்வாதம் லேன்.
தெற்கு - ஒழுங்கை இதடங்கலும்.

தற்போது செபரட்ணம் ஜெனதாஸ் பெண் தேவமனோகரி இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு, இல-203/10.ஆசீர்வாதம் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமது அற்றோணித் தத்துவக்காரர் ஜெயராஜகுலேந்திரன் வோல்வின் மூலம் விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது செபரட்ணம் ஜெனதாஸ் பெண் தேவமனோகரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.**

(cr.43969) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 04 . 1960



மறைவு
23 . 12 . 2024

## விவேகானந்தன் ஜெயலட்சுமி (தேவி)

அறுகுவெளி, தனங்களப்பு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விவேகானந்தன் ஜெயலட்சுமி (தேவி) நேற்றுமுன்தினம் (23.12.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சங்கரப்பிள்ளை - அருளம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தேவதாசன் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விவேகானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பிரகாஷ் மற்றும் பிரதீபன் (தீபன் - கட்டார்), லோகேஸ் (கண்ணா), கௌசல்யா (ஆஷா -சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் விமலாதேவி, கமலாதேவி, சரோஜினிதேவி, காலஞ்சென்ற உருத்திராதேவி மற்றும் விஜயலட்சுமி, காலஞ்சென்ற யசோதை மற்றும் தங்கராசா, கலாவதி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயராஜின் பாசமிகு மாமியாரும், கபிசன், திபிகா, தேஷ்மி (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அறுகுவெளியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தனங்களப்பு முள்ளிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 962 4849 (கண்ணா)

(cr 43968) N-1

சாவகச்சேரியில்

## வீடு புகுந்து பட்டப்பகலில் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 25

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரசடி ஆசிரியர் வீதிப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பகல் வேளையில் துணிகர திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது வீட்டில் இருந்த 8பவுண் நகை, 200 கனேடியன் டொலர் மற்றும் 35ஆயிரம் ரூபா இலங்கைப் பணம் ஆகியன திருடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-27)

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
08 - 10 - 1961



விண்ணில்
25 - 12 - 2016

## அமரர் வல்லி சிதம்பரநாதன்

பாசத்தின் உறைவிடமே பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும் கூடிக்களித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்றமொழியின்றி தவிக்கிறதே - நின் உறவின்
அடிதேடித் துடிக்கிறதே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

27/15, நக்கா வீதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.

சிதம்பரநாதன்
குடும்பத்தினர்.

(CS/57018) J-1

# மரண அறிவித்தல்



## ஆறுமுகம் பசுபதி

### (சுதா அரைக்கும் ஆலை உரிமையாளர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், 10ம் கட்டை விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பசுபதி அவர்கள் கடந்த (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ர புதல்வரும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், தங்கமணியின் (பெற்றி) ஆருயிர் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சீதேவிப்பிள்ளை (தங்கம்) மற்றும் தில்லைநாயகி, சின்னம்மா, நித்தியபாக்கியம் (பிரான்ஸ்), தர்மரட்ணம் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாளன் (லண்டன்), காலஞ்சென்ற முகுந்தன் மற்றும் மோகனன் (அவுஸ்ரேலியா), சுகந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணபதிப்பிள்ளை, குணேஸ்வரி, நடராசா, கேதாரநாதன், கமலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், சுதாஜினி (லண்டன்), குமுதினி (அவுஸ்ரேலியா), அகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷா, ஆருஷா, பாரிசாலன், சஸ்வின், கிஷான், யஸ்வி, யஷானி, சயிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு 12ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தோற்றம்
26.02.1946

மறைவு

10ம் கட்டை,
விசுவமடு.

குடும்பத்தினர்
077 813 0374

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவேந்திர...

தற்போது பாதுகாப்புப் படைகளின் பதில் பிரதானியாக ஜெனரல் சவேந்திர சில்வா 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கடமையாற்றுகின்றார். பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக செயற்பட்ட அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன அந்தப் பதவியில் இருந்து ஓய்வுபெற்றபின்னர், அப்போதைய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் ஜெனரல் சவேந்திர சில்வா பாதுகாப்புப் படைகளின் பதில் பிரதானியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகத்தை இல்லாமல் செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, முன்னாள் இராணுவத்தளபதியான சவேந்திர சில்வா, இறுதிப் போர் இடம்பெற்றபோது வன்னிக் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டிருந்தார். இறுதிப் போரில் நடந்த மனித குலத்துக்கு ஒவ்வாத குற்றச்செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர் என்ற அடிப்படையில் அமெரிக்கா சவேந்திர சில்வா மற்றும் அவரது குடும்பத்தினருக்குப் பயணத் தடை விதித்துள்ளது. (அ-எ-6)

## பெண்ணுடன்...

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை காங்கேசன்துறையில் நடந்துள்ளது. அதே பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு பெண்ணுடன் தவறாக உரையாடினார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மாவிட்டபுரத்தில் உள்ள தையலகம் ஒன்றில் குறித்த பொலிஸ்காரர் சீருடையை தைக்கக் கொடுத்துள்ளார். பின்னர் அந்தச் சீருடையை எடுக்கச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் தையலகத்துக்கு வந்திருந்த இரு பெண்களிடம் தவறாக நடக்க முயன்றார் என்று கூறப்படுகின்றது.

இரு பெண்களில் ஒருவர் இதுதொடர்பாகத் தனது கணவருக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியதை அடுத்து, அவர் அங்கு வந்து பொலிஸ் உத்தியோகத்தருடன் தர்க்கப்பட்டுள்ளார். இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் பொலிஸ் உத்தியோகத்தரை நையப்புடைத்து முச்சக்கரவண்டியில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சம்பவம் தொடர்பாக விசாரிக்க முயன்றபோது, அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் பெண்ணின் கணவரைத் தாக்க முற்பட்டுள்ளார். தையலகத்துக்கு வந்த பொலிஸ் உத்தியோகத்தர் 'என்னிடம் கார் உள்ளது . நீங்கள் அழகாக இருக்கிறீர்கள். என்னுடன் வருகிறீர்களா?' என்று கொச்சைத் தமிழில் கேட்டு மதுபோதையில் அடாவடித்தனம் செய்தார் என்று பாதிக்கப்பட்ட பெண் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இரு தரப்பினரையும் சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டதை அடுத்து, இந்த விடயம் யாழ்ப்பாணம் பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தவிடயம் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் த.கனகராஜ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைக் கேட்டபோது, அவர் பொலிஸ் ஊடகப் பேச்சாளரைத் தொடர்புகொள்ளுமாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் கேட்டபோது, காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் 22 வயதான பெண் ஒருவரை பாலியல் துன்புறுத்தல் செய்ய முயன்றார் என்று கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார். (அ-எ-125)

## மீனவர்...

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் இரு படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில், இலங்கைக் கடற்படையினரால் நேற்றுச் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத ஆறு நபர்களால், நாகப்பட்டினம் கோடியக்கரை கிராமத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட இரு சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. இந்தத் தாக்குதலில் இரு நாட்டுப் படகுகளில் பயணித்த ஆறு மீனவர்களில் மூவர் காயமடைந்துள்ளனர். மீனவர்களின் மீன்பிடி படகுகளில் இருந்த கருவிகள், மீன்பிடி வலை, கையடக்கத் தொலைபேசி, அவர்கள் பிடித்த மீன்கள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் மட்டும் 530 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், 71 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் இத்தகைய சம்பவங்களும், தாக்குதல்களும் மீன்பிடித் தொழிலை மட்டும் நம்பி வாழும் மீனவ மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களின் மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்கவும், தாக்குதல் சம்பவங்கள் எதிர்காலத்தில் நடக்காதிருப்பதற்கு [illegible] நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-எ-இ)

## தமிழக...

பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு முதற்கட்ட விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், மன்னார் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணைகளின் பின்னர் நேற்று மதியம் அவர்கள் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-56)

## கச்சதீவை...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வாக கச்சதீவை இந்தியா மீளப் பெறவேண்டும் என்று தமிழகத்தை ஆளும் தி.மு.க.வின் மத்தியகுழுவில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர், கச்சதீவு தொடர்பாக இந்திய அரசாங்கம் எந்தக் கோரிக்கையையும் விடுக்கவில்லை. இந்தியாவில் உள்ள கட்சிகள் கூறும் விடயங்கள் முக்கியத்துவம் பெறாது. இந்திய அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் அதுதொடர்பில் பேசலாம் என்று தெரிவித்தார். (அ-எ-44)

## நாடு...

தடை வாசகங்களுடன், புகைத்தலால் ஏற்படும் தீங்கு தொடர்பான விவரங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. எதிர்காலத்தில் மேலதிக புகைத்தல் தடை வலயங்கள் உருவாக்கப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, இலங்கையில் ஆண்டுதோறும் 20 ஆயிரம் பேர் புகைப்பிடிப்பதன் காரணமாக உயிரிழக்கின்றனர் என்று சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-எ-6)

## தவறான...

கோண்டாவிலில் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

42 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சடலம் ஒப்படைக்கப்பட்டு, இறப்பு விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-எ-66)

## மதுக்கடைகளை...

தனர். இந்தக் கண்டன ஊர்வலத்தில் வடக்கு கிழக்கு மறுவாழ்வு நிறுவனத்தின் கீழ் இயங்கும் மதுபோதைக்கு எதிரான அமைப்பு, பொதுமக்கள், மதகுருமார்கள், சமூகமட்ட அமைப்புகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலதரப்பினரும் கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இருந்து ஆரம்பமான கண்டன ஊர்வலம் மாவட்டச் செயலகத்தைச் சென்றடைந்து, ஜனாதிபதிக்கான மனு அங்கு கையளிக்கப்பட்டது.

மதுபான விற்பனை நிலையங்கள் இல்லாதிருந்த கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டில் மட்டும் 16 மதுபான விற்பனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றைவிடவும் 11 மதுபான விற்பனை நிலையங்கள் திறப்பதற்கான அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன என்று அறிகின்றோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முந்திய மூன்று மாதங்களுக்குள் இவை திறக்கப்பட்டுள்ளன. கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குள் அதிகமான மதுபான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

போரால் பாதிக்கப்பட்டு மெல்ல மெல்ல மீண்டெழுந்துகொண்டிருக்கும் கிளிநொச்சி மாவட்டம் மதுபோதையால் அழிவதை அனுமதிக்க முடியாது. இதனால் அன்றாடம் கூலித் தொழிலுக்குச் செல்பவர்களின் குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. குடும்ப வன்முறைகளும் உருவாகின்றன. மாணவர்களும் போதைக்கு அடிமையாகின்றனர். ஏ-9 வீதியில் இந்த மதுபான விற்பனை நிலையங்கள் வரிசையாக அமைந்திருப்பதால் மதுபோதையால் ஏற்படும் விபத்துகள் அதிகரித்துள்ளதுடன், இரவில் பயணிப்பதும் ஆபத்தானதாக மாறியிருக்கின்றது.

இந்த மதுபான விற்பனை நிலையங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசியல் இலஞ்சமாக வழங்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் பலமாக இருக்கின்றது. தங்களின் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களின் கருத்துகளும் அதை உறுதிப்படுத்துவதாக இருக்கின்றன. அதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள மதுபான விற்பனை நிலையங்களை நிரந்தரமாக மூடவேண்டும் என்று ஜனாதிபதிக்கு கையளித்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-113)

## கணவன்,...

னா். அராலியைச் சேர்ந்த கணவனும், மனைவியும் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து நடந்துள்ளது.

மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மானிப்பாய் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுநீரகம் தேவை

B+ குருதி வகையை சேர்ந்த ஒருவருக்கு
B+ or O+ குருதிவகையை சேர்ந்த சிறுநீரகம் தேவை.
35 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. HIA Test Report இருந்தால் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**077 479 4826, 077 116 5375**

(CS/57014) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

- 18 அடிப்பாதையுடன் நன்னீரூற்று
- உரும்பிராய்ச்சந்தியிலிருந்து 500m தூரம்
- உரும்பிராய்ச்சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற் வீதியிலிருந்து 50m தூரம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 வரை மற்றும் பிற்பகல் 3.00 மணி முதல் பிற்பகல் 6.00 வரை. தொடர்புகளுக்கு:

**குரு : 076 017 1105**

(CS/57011) J-1

## TECHNO WORLD
### A/L தொழில்நுட்பப் பிரிவு

**செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்**

பொறியியல் தொழினுட்பம்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

ஆரம்பம் : 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி

இடம் - வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: **077 017 5346**

(CR/43966) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி மெயின்றோட்டுடன் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 1 1/2, 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப்பாதையுடன் நிலப்பரப்பு. மேட்டுநிலம். நன்னீரூற்று
- UDA அனுமதி. பிரதேசசபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
- பரம்பரை ஆவணம்.
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் பிற்பகல் 1.00 மணி வரை. பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 மணி வரை

**குரு :- 076 069 1105, 076 298 1105**

(CS/57012) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி சந்நிதி வீதி வீரபத்திரர் றோட்டில் 5 1/2 பரப்புக் காணி 1 1/2 பரப்பாகப் பிரித்த நிலையில் விற்பனைக்கு உண்டு.

- நிலப்பரப்பு
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி

தொடர்புகளுக்கு: **077 288 0152**
**077 468 3354**

(CS 57013) V-1


# அன்புப் பிணைப்பை ஏற்படுத்தி உறவுகளை வலுப்படுத்துவோம்

## யாழ். ஆயர் கிறிஸ்மஸ் வாழ்த்து



யாழ்ப்பாணம், டிசெ.25

கிறிஸ்மஸ் நமது மீட்பராகிய கிறிஸ்து இயேசுவின் பிறப்பை நினைவு கூரும் அமைதியும், அன்பும் நிறைந்த புனித நாளாகும். யூபிலி ஆண்டில் சமூகங்களுக்குள் அன்புப் பிணைப்பை ஏற்படுத்தி உறவுகளை வலுப்படுத்துவோம் என்று தெரிவித்துள்ளார் யாழ்.மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம்.

அவர் வெளியிட்டுள்ள கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புனித அவதாரம் கொண்ட இயேசுவின் அன்பை நினைக்கும் இப்புனித காலத்தில் நாம் மனித உறவுகளில் நம்பிக்கையையும், மன்னிப்பையும், அமைதியையும் ஏற்படுத்த வேண்டும். இறை இயேசுவின் அன்புக்காக ஏங்கியுள்ள எம் உறவுகளுடன் குறிப்பாக பல்வேறு வகையான துன்ப துயரங்களுக்குள்ளாகி நோயாளிகளாகவும், சிறையிலும், இழப்புகளைச் சந்தித்தவர்களாகவும், காணாமற்போனவர்களின் உறவுகளாகவும் வாழ்வோரில் குழந்தை இயேசுவின் அன்பைப் பகிர முயல்வோம். ஏழை எளிய மக்களுடன் எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து அவர்களும் இயேசுவின் அன்பை உணர கரம்கொடுப்போம்.

இவ்வாண்டு கிறிஸ்மஸ் விழா, எதிர்வரும் யூபிலி ஆண்டின் ஆரம்பமாக அமைவதால் சிறப்பம்சம் பெறுகின்றது. ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கின்ற கசப்பான காழ்ப்புணர்வுகளைத் துண்டித்து மன்னிப்பின் மக்களாவோம். உங்கள் அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துகள்- என்றுள்ளது. (எ-இ)

# கிழக்கின் அபிவிருத்திக்கு இந்தியா ரூ. 2371 மில்லியன்

கொழும்பு, டிசெ.25

கிழக்கு மாகாணத்தின் சில அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய கிழக்கு மாகாணத்தின் சில அபிவிருத்தித் திட்டங்களுக்காக 2371 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், சுற்றுலா மற்றும் சமூக வலுவூட்டல் ஆகிய துறைகள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இதன்படி, கல்விக்காக 315 மில்லியன் ரூபாவும், சுகாதா ரத்திற்காக 780 மில்லியன் ரூபாவும், விவசாயத்திற்கு 620 மில்லியன் ரூபாவும், மீன்பிடிக்காக 230 மில்லியன் ரூபாவும் உட்பட 33 திட்டங்களுக்கு 2371 மில்லியன் ரூபாவை இந்திய அரசாங்கம் வழங்கவுள்ளது. (ச-இ)

## நத்தார் தின ஆராதனை

யாழ்ப்பாணம், டிசெ.25

மட்டுவில் புனித லூர்த்து அன்னை ஆலயத்தில் நத்தார் தின ஆராதனைகள் சாவகச்சேரி பங்குத்தன்னை தலைமையில் நேற்று நள்ளிரவு நடைபெற்றது. (எ-131)

## எலிக்காய்ச்சல் அறிகுறியுடன் இருவர் சிகிச்சைக்கு சேர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.25

மந்திகை ஆதார மருத்துவமனையில் நேற்று இருவர் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இருவருக்கு நோய் நிலைமை அதிகரித்ததை அடுத்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (எ-26-100)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சுகாதாரத் தொண்டர்களின் நியமனம் தொடர்பாக சுகாதார அமைச்சருடன் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனாவின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு கொழும்பில் நடைபெற்றுள்ளது.


**வார்த்தையாகிய கடவுள் உங்களை ஆசீர்வதிக்கிறார்**

உங்கள் PHONES மற்றும் கணினி சாதனங்களில் BIBLE ஐ Install செய்து வாசியுங்கள்.
தேவாலயத்திற்கு சென்று வழிபடுங்கள்.
தேவாலயத்தில் சிரமதானம் செய்யுங்கள்.

மா.செ.சுதர்சன்

**077 725 1296**

(CS/56880) J-1

## விற்பனைக்கு

சித்தன்கேணி, அளவெட்டி போன்ற இடங்களில்

- 200 காடைக்கோழி (4 நிறங்கள்) ஒன்றின் விலை ரூபா 350/-
- மணித்தாரா ஒன்றின் விலை ரூபா 3,500/-
- கினிக்கோழி ஒன்றின் விலை ரூபா 2000/-

தொடர்பு:- **075 916 9088**

(CS/57009) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.